## கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 310/2024**

திரு. சுப்பிரமணியம் (P.W –1) **02.02.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. வாதி நிறுவனத்தில் நான் பங்குதாரர் என்றால் ஆமாம். எங்களுடைய நிறுவனம் கூட்டாண்மை பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு பதிவு செய்யப்பட்டதற்கான ஆவணங்கள் எதுவும் முதல்விசாரணை வாக்குமூலத்துடன் தாக்கல் செய்யவில்லை என்றால் ஜி.எஸ்.டி காக பதிவு செய்துள்ளோம். கூட்டான்மை நிறுவனத்தை நாங்கள் பதிவு செய்யவில்லை. எங்களுடைய கூட்டமை நிறுவனத்தின் பங்குதாரர் யார் என்றால் முரளி. முரளி தாவாவை தாக்கல் செய்வதற்கு எனக்கு அதிகாரம் எதுவும் கொடுக்கவில்லை. அவருக்கு தாவா தாக்கல் செய்து உள்ளது தெரியாது என்றால் அதை பற்றி எனக்குத் தெரியாது.

2. பிரதிவாதி நிறுவனம் கூட்டாண்மை நிறுவனம், அவ்வாறு பிரதிவாதி நிறுவனம் கூட்டாண்மை நிறுவனத்திற்கு ஆவணங்கள் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் இல்லை. பிரதிவாதி நிறுவனத்தில் கனகராஜ் மற்றும் ஆசா பங்குதாரர்களாக இல்லை என்றால் அதைப்பற்றி எனக்குத் தெரியாது. பொருட்களை பெறும்போது காசோலை கொடுத்து தான் பெற்றார்கள். பிரதிவாதி நிறுவனத்திற்கு இன்வாய்ஸ் எண்.165 இன் கெமிக்கல் விற்பதற்காக போடப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. அந்த இன்வாய்ஸ் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்குத் தெரியவில்லை. வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். பிரதிவாதி நிறுவனத்திற்கு கேமிக்ல்ஸ் ரூபாய். 66,675 க்கு விற்றதாக சொல்வதே பொய் என்றால் சரி.

3. மூன்றாம் பிரதிவாதி அதற்காக ICICI வங்கி காசோலை கொடுக்கவும் இல்லை அதை நான் வசூலுக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு. பணமாக

கொடுத்து விட்டு காசோலையை பெற்றுக் கொள்வதாக சொன்னார். அந்தக் காசோலையில் குறிப்பிட்டுள்ள தொகை இன்வாய்ஸ் 165 இல் குறிப்பிட்டுள்ள தொகைக்காக கொடுக்கப்படவில்லை என்றால் எனக்குத் தெரியாது. எங்களுடைய நிறுவனம் கூட்டாண்மை பதிவு ஏற்படவில்லை என்பதால் நான் தாவாவை தாக்கல் செய்துள்ளது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. தாவாவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டுள்ளது. எந்த ஒரு ஆவணங்களும் பிரதிவாதிகள் கையொப்பம் செய்து எங்களிடம் கொடுக்கவில்லை என்றால் தவறு. தாவா செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S/d.கே.ஆர்.கண்ணன்
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.